தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:22.09.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கல்வி உதவித்தொகை வழிகாட்டு மையத்திறப்பு விழா**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு வழங்கும் அரசாங்க கல்வி உதவித்தொகைகள் குறித்த ஒருநாள் பயிற்சி அண்ணா கலையரங்கத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியினை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார். உதவித்தொகை என்பது உயர் கல்வியை தொடர்ந்து படித்து பயன் பெற மாணவர்களுக்கு அரசு வழங்கும் நிதி உதவியாகும். இது மாணவர்கள் தங்களை மேம்படுத்திக்கொள்ளவும், உயர்கல்வி மூலம் தங்கள் வாழ்வில் முன்னேற்றம் அடையவும் வழிவகுக்கிறது. உதவி தொகையானது மாணவர்களுக்கு முறையாக சென்றடையவே பல்கலைக்கழகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கூறினார். இதன் முதற்கட்டமாக அணைத்து கல்லூரிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் கல்வி உதவி தொகை வழிகாட்டு மையம் முதன்மையர் (வேளாண்மை), வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இவ்விழாவில் சிறப்புரை ஆற்றிய பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் ஆர். தமிழ்வேந்தன் அவர்கள் மாணவர்களுக்கு அரசு வழங்கும் நிதி, முறையாக மாணவர்களுக்கு சென்றடைய வேண்டும். அதனை அனைத்து கல்லூரி முதல்வர்களும் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுகொண்டார். மேலும், முனைவர் என். வெங்கடேச பழனிச்சாமி, முதன்மையர் (வேளாண்மை), வேளாண்மை கல்லூரி

மற்றும் ஆராய்ச்சி நிலையம் அவர்கள் தனது சிறப்புரையில் மாணவர்களின் நலனுக்காகவும் எதிர்காலத்திற்காகவும் பல்வேறு நலத்திட்ட பணிகளையும் பல்கலைக்கழகம் செய்து வருகிறது. அந்த வகையில் மாணாக்கர்களின் உதவித்தொகை குறித்த வழிகாட்டுதலுக்காக புதிதாக உதவித்தொகை அலுவலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உதவித்தொகை பெறுவதில் மாணவர்கள் விடுபடக்கூடாது என்றார்.

இவ்விழாவில் இணைபதிவாளர்கள் முனைவர் என். கணபதி மற்றும் முனைவர் எஸ். முத்துசாமி பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகள் கல்வி உதவித்தொகை பெரும் வழிமுறைகள் மற்றும் காலவரையறைகள் ஆகியவற்றை தெரிந்து கொண்டு அதன்படி விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தினர் . கல்வி உதவித்தொகை நோடல் அதிகாரி முனைவர். பி. ஜீ. கவிதா மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு உதவித்தொகைத் திட்டங்களை பற்றியும், தேசிய ஸ்காலர்ஷிப் இணையத்தளத்தில் (NSP portal ) விண்ணப்பம் செய்வது குறித்த விளக்கங்களையும் வழங்கினார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் உதவித்தொகை நோடல் அதிகாரியான முனைவர். கெ.பிரபாகரன் மற்றும் முனைவர். கெ.சாராபர்வின்பானு அதன் சிறப்பு திட்டங்களையும் அங்கீகாரம் பெறும் வழிமுறைகளையும் பற்றி விளக்கினர். இப்பயிற்சியின் போது உதவித்தொகை குறித்த புத்தகக்கையேடு வெளியிடப்பட்டது. உதவித்தொகை நோடல் அதிகாரி முனைவர் ஆர். சுதாகர் நன்றியுரை வழங்கினார்.

இப்பயிற்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் 18 உறுப்பு கல்லூரிகள் மற்றும் 28 இணைப்பு கல்லூரிகளைச் சேர்ந்த முதன்மையர்கள், உதவிபேராசிரியர்கள், மற்றும் அலுவலக பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**